துவங்க வேண்டுமென்றால் அந்தத் தொழிலைப் புரிபவர்கள், போதுமான எண்ணிக்கையில் இருப்பார்களேயானால், அவர்கள் விண்ணப்பிக்க வேண்டும். அப்படி யாரும் விண்ணப்பிக்கவில்லை. விண்ணப்பிப்பார்களேயானால் அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. மு. இராசாங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருபுவனம் நகர பஞ்சாயத்துப் பகுதியிலே நூற்றுக்கும் மேற்பட்ட அங்கத்தினர்கள் பாய் நெசவுத் தொழிலுக்காக கூட்டுறவுச் சங்கத்திலே அங்கத்தினர்களாக ஆகி, ஒரு ஆண்டுக்கு மேலாகியும், சங்கம் தொடங்கப்படாமல் இருக்கிறது. அது குறித்து அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது குறித்து அரசின் கவனத்திற்கு இன்னும் வரவில்லை.

குற்றாலம் பட்டு நூல் வளர்ப்புப் பண்ணை.

15—(*வினா எண். 4276)—திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குற்றாலம் பட்டு நூல் வளர்ப்புப் பண்ணையை விஸ்தரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே— (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குற்றாலம் பட்டு நூல் வளர்ப்புப் பண்ணையை சமீபத்திலே பார்வையிட்ட போது நானும் உடன் இருந்தேன் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். அப்போது பட்டுப் பூச்சி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அங்கே சில திட்டங்களை நிறைவேற்ற வேண்டும்

என்று சொல்லி கோரிக்கைகள் வெளியிடப்பட்டபோது, அது தொடர்பாக ஆவன செய்வதாக அமைச்சர் அவர்கள் உறுதி அளித்தார்கள். அது தொடர்பாக அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகி றேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றாலம் பட்டு வளர்ப்புப் பண்ணையை மாண்புமிகு உறுப்பினரோடு சென்று நான் பார்வை யிட்டேன். அந்த இடத்தில் புதியதாக தேவையான அளவுக்கு நல்ல நோயற்ற, வீரியம் உள்ள பட்டு முட்டைகளை உற்பத்தி செய்கிற அளவிற்குச் சரியான நல்ல சூழ்நிலை அமைந்திருக்கிறது. இருந்தாலும்கூட, திருநெல்வேலி, கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களுக்கும், அங்கேயிருந்து தான் பட்டு முட்டைகளை வினியோகம் செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே மேலும் தேவைப்படுகிறபோது, நிச்சயமாக விரிவாக்கப்படும் என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே முதன் முதலாக ஆரம்பிக்கப் பட்டிருக்கிற ஒரு சில பட்டுப் பூச்சி வளர்ப்பு பண்ணைகளிலேயே குற்றாலத்திலே அமைந்திருக்கிற நிலையம்தான் முதன்மை யானது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள். ஆனால் அதற்குப் பின்னாலே அமைக்கப்பட்ட நிலையங்கள் எல்லாம் மிகச் சிறப்பாக வளர்ச்சி பெற்றிருந்தும்கூட, குற்றா லத்திலே அதற்கான இயற்கை சூழ்நிலையும் மிகச் சிறப்பாக இருந்த நிலையிலும்கூட, இன்னும் அபிவிருத்திச் செய்யப்பட வில்லை. ஆகவே அங்கே குளிர் சாதன வசதிகளைச் செய்து கொடுப்பதோடு, Mating centres-ஐ சீராக்கி சரிப் படுத்தினால் உற்பத்தியை அதிகமாகப் பெருக்கலாம் என்று அதி காரிகளும், விவசாயிகளும் அமைச்சரிடத்திலேயே நேரிடை யாகச் சொன்னார்களே, அதுபற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றாலத்தைப் பொறுத்த மட்டில் நீண்ட நெடுங்காலமாக அந்தப் பட்டுப் பூச்சி வளர்ப்புப் பண்ணை இயங்கி வருகிறது, சிறப்பாக இயங்கி வருகிறது. திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய இரண்டு மாவட்டங்களுக் கும் தேவையான பட்டு முட்டைகளை அங்கேயிருந்துதான் வழங்கிக் கொண்டிருக்கிறோம். அந்த இரண்டு மாவட்டங் களுக்கும் எவ்வளவு தேவையோ அந்த அளவிற்கு அந்தப் பண் ணையில் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

1986 நவம்பர் 14]

தமிழகத்தில் வருங்காலத்தில், ஏறக்குறைய 7-வது ஐந்தாண்டு திட்டக்காலம் முடிவடைவதற்குள் ஒரு லட்சம் ஏக்கரில் பட்டு விவசாயம் செய்ய வேண்டும், முசுக்கொட்டைச் செடியைப் பயிரிட வேண்டும் என்று ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். அந்த நேரத்திலே நிச்சயமாக அந்தப் பண்ணையை விரிவாக்கம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. ஆகவே, அவசியம் ஏற்படுகிறபோது நிச்சயமாக எந்த அளவிற்கு விரிவாக்க வேண்டுமோ அந்த அளவிற்கு விரிவாக்குகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டம் கரம்பக்குடியில் பாலிதின் பை உற்பத்தி கூட்டுறவுச் சங்கம்.

16—(*வினா எண்.8141)—திரு. அ. வெங்கடாசலம்: மாண்புமிகு ஊரகத் தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, கரம்பக்குடியில் பாலிதின் பை உற்பத்தி செய்யும் தொழில் கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே—(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. அ. வெங்கடாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், இன்றைக்கு இருக்கிற மாவட்டங்களிலேயே மிகவும் சாதாரண நிலையில் உள்ள பின் தங்கிய மாவட்டம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அத்தகைய மாவட்டத்தில் என்னுடைய தொகுதியாகிய கரம்பக்குடி பகுதி மிகவும் பின் தங்கிய பகுதியாக இருக்கிற கால கட்டத்தில், குறிப்பாக புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தொகுதியில், எந்த ஒரு தொழிற்சாலையும் இல்லாத நிலையில், அந்தக் கரம்பக்குடி பகுதியில் உள்ள படித்தவர்களுக்கும், சாதாரண மக்களுக்கும் வேலை கிடைக்கக் கூடிய அளவிற்கு, பாலிதின் பை

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS